C.O.S.No.2/2023 தேதி – 15.04.2025

வா.சா.2. – அருண்குமார்

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

நான் வாதி நிறுவனத்திற்கு தணிக்கையாளராக கடந்த 3 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். வாதி நிறுவனத்தின் வரவு செலவு சம்மந்தப்பட்ட ஆவணங்களை பார்த்துள்ளேன். தணிக்கை செய்வதற்குரிய என்னுடைய கட்டணத்தை வங்கி மூலமாக பெற்றுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வரவு செலவு சம்மந்தப்பட்ட ஆவணங்களுக்கு முன்பாக வாதி நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வந்த வரவு செலவு ஆவணங்களை பார்வையிடவில்லை. 2024ம் வருடத்திற்கான வாதி நிறுவனத்தின் ஜி எஸ் டி படிவம் சமர்பிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். வாதி நிறுவனத்தில் சமர்பிக்கப்பட்ட வருமான வரி துறை படிவங்களில் தணிக்கையாளர் படிவம் இணைக்கப்பட வேண்டும் என்றால் சரிதான். வாதி நிறுவனம் எத்தனை வங்கிகளில் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருவது என்பது வருமான வரி துறை படிவங்களில் தெரிவிக்கவேண்டுமா என்றால் வாதி நிறுவனத்தின் உரிமையாளர் ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் நடத்தி வருவதால் பொதுவாக அவருடைய தனிப்பட்ட வங்கிக்கணக்கை மட்டும் வருமான வரி துறை படிவங்களில் தெரிவிப்பார். வாதி நிறுவனம் நாள்வழிப் பதிவேடு, லேட்ஜர், சரக்கு இருப்பு பதிவேடு, சரக்கு கொள்முதல் பதிவேடு ஆகியவற்றை பராமரிக்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் வாதிநிறுவனம் ஐந்தொகை கணக்கு (Trial balance) தயார் செய்யப்படும் என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.